# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க

## தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம்.

---

**[1980, ஒத்தோபர் மாதம் 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

*அரசினர் ஆணைப்படி. அச்சிடப்பட்டது.*

---

1980, ஒற்ரோபர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும் 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 21.00 தபாற் செலவு ரூபா. 7.50

## 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம்

[1980 ஒத்தோபர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

ச. வ.—ஏ. 53/80
1284

**அரசியலமைப்பின் 101 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, தேருநர்களைப் பதிவுசெய்வதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதியும்.

1. இச்சட்டம், 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### தேருநர்களின் தகைமைகள்

பதிவுசெய்வதைத் தகைமையீனப் படுத்தும் சந்தருப்பங்கள்.

2. எவரேனும் ஆள், அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தகைமையீனங்களுக்கு உட்பட்டவராயிருந்தால், அத்தகைய ஆள், எதேனும் ஆண்டில் எதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான எதேனும் தேருநர் இடாப்பில், (இச் சட்டத்தின் பிரகாரம் "இடாப்பு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) அவரது பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமையுடையவராதல் ஆகாது.

வயதைத் தீர்மானிப்பதற்கான தகைமைபெறு தேதி.

3. தேருநரொருவராகப் பதிவு செய்யப்படும் நோக்கங்களுக்கென தகைமை பெறுவதற்காக, ஆளொருவர் எத்தேதியன்று பதினெட்டு வயது நிரம்பிய ஆளாக இருக்க வேண்டுமோ அந்தத் தேதியான தகைமை பெறு தேதி எந்தவோர் ஆண்டினதும் யூன் முதலாம் நாளாகும் என்று இத்தால் விதித்துரைக்கப்படுகிறது.

வதிவிடத்தைத் தீர்மானிப்பதற்கான தகைமைபெறு தேதி.

4. (1) எதேனும் தேர்தல் மாவட்டத்தின் இடாப்பில் பதிந்துகொள்ளப்படுவதற்கு, அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதற்கு அந்தத் தேர்தல் மாவட்டத்தில் ஆளொருவர் எந்தத் தேதியன்று வதிபவராக இருக்க வேண்டுமோ அந்தத் தேதியான தகைமை பெறு தேதி எந்தவோர் ஆண்டினதும் யூன் முதலாம் நாளாகும் என்று இத்தால் விதித்துரைக்கப்படுகிறது.

(2) எந்தவோர் ஆண்டினதும் யூன் முதலாம் நாளில் எதேனும் தேர்தல் மாவட்டத்தில் எந்த முகவரியில் ஆளொருவர் வழமையாக வதிந்தாரோ, அந்த முகவரி இதனகத்துப்பின்னர் அவரது "தகைமையளிக்கும் முகவரி" எனக் குறிப்பிடு செய்யப்படுகின்றது.

(3) எந்தவோர் ஆண்டினதும் யூன் முதலாம் நாளில் ஆளொருவர் வழமையாக வதிந்தாரா என்பது பற்றிய எந்தப் பிரச்சினையையும் தீர்மானிக்கையில், சம்பந்தப்பட்ட முகவரியில் அவர் தொடர்ந்தாற்போன்ற காலப்பகுதியில் இல்லாதிருந்தமைக்கான நோக்கத்திற்கும், ஏனைய சந்தர்ப்பங்களுக்கும், அவர் இருந்தார் அல்லது அவர் இருக்கவில்லை என்ற நிகழ்வுக்கும், அத்துடன் குறிப்பாக அவரினால்

வழிக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பதவியிலிருந்து, சேவையிலிருந்து அல்லது தொழிலிலிருந்து எழுகின்ற அல்லது விளைகின்ற ஏதேனும் கடமையைப் புரிவதற்காக அவர் அத்தகைய முகவரியில் இல்லாதிருந்தார் என்பதற்கும் குறிப்பாகக் கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

தேருநர்களுக்கான பொருத்தகைமைகள்.

5. ஆறும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வேறுவகையில் தகைமையற்றவராக்கப்படாத ஒவ்வோர் ஆளும், இடாப்பொன்றில் தனது பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

தகைமையளிக்கும் முகவரிகளின் கீழ் இடாப்புகள் பெயர்களைப் பதிதலும் தொடர்ந்து வைத்திருத்தலும்.

6. ஏதேனும் ஆண்டில், ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான இடாப்பில் ஆளொருவரின் பெயர் அவரது தகைமையளிக்கும் முகவரியின் கீழ்ப் பதியப்படுதல் வேண்டும் அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஆள், வேறேதேனும் முகவரியின்கீழ் அவரது பெயர் அவ்வாறு பதிந்துகொள்ளப்படுவதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது :

ஆயின், எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆளை தேருநரொருவராகப் பதிவு செய்தலானது, அத்தகைய இடாப்பில் அவரின் பெயரைப் பதிதல் அல்லது தொடர்ந்து வைத்திருத்தல் தொடர்பில், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறப்பட்டமை என்னும் காரணத்துக்காக மட்டும் செல்லுபடியற்றதென அல்லது பயனற்றதெனக் கருதப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

பன்முறைப் பதிவுசெய்தல் மீதான மட்டுப்பாடு.

7. (1) ஆளெவரும், தமது பெயரை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடாப்புகளில் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமைகொண்டிருக்கக்கூடும் என்பது எவ்வாறிருப்பினும், அவர் தமது பெயரை ஒன்றுக்கு அதிகமான இடாப்புகளில் பதிந்து கொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) ஆளெவரும், ஒரே இடாப்பில் ஒரு தடவைக்குக் கூடுதலாக அவரது பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமை கொண்டிருக்கக்கூடும் என்பது எவ்வாறிருப்பினும், அவ்வாறு ஒரு தடவைக்குக் கூடுதலாக தமது பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

## பாகம் II

## பதிவு அலுவலர்கள், வாக்கெடுப்புப் பிரிவுகள், அத்துடன் வாக்கெடுப்பு மாவட்டங்கள்

**பதிவு அலுவலர்களின் நியமனம்.**

8. (1) அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின்கீழ்ப் பிரகடனம் வெளியிடப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக (இதனகத்துப் பின்னர் " ஆணையாளர் " எனக் குறிப்பிடப்படும்) தேர்தல்கள் ஆணையாளர், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்குமென பதிவு அலுவலரொருவரை பெயர்குறித்து அல்லது பதவி குறித்து நியமித்தல் வேண்டும்; அத்துடன் எவரேனும் பதிவு அலுவலர் அவரது கடமைகளைப் புரிவதில் அவருக்கு உதவுவதற்கென ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து காலத்துக்குக்காலம் நியமிக்கலாம். மேற்சொல்லப்பட்டவாறு அத்தகைய எவரேனும் அலுவலருக்கு உதவுவதற்கென அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளொருவர், எந்த அலுவலருக்கு உதவுவதற்கென அவர் நியமிக்கப்பட்டாரோ, அந்த அலுவலரின் எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவரின் எல்லாக் கடமைகளையும் புரியவும் முடியுமாம்; அத்துடன், பதிவு அலுவலரொருவர் பற்றி இச்சட்டத்திலுள்ள குறிப்பெதுவும், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி, உதவிப் பதிவு அலுவலரொருவர் பற்றிய குறிப்பொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் ஆணையாளரால் செய்யப்பட்ட நியமனமொன்று அவரால் எந்நேரத்திலும் ஒழிக்கப்படலாம்.

**வாக்கெடுப்புப் பிரிவுகளும் வாக்கெடுப்பு மாவட்டங்களும்.**

9. (1) அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின்கீழ் பிரகடனம் வெளியிடப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக, மேற்சொல்லப்பட்ட பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலரும், ஆணையாளரால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளுக்கிணங்க,—

(அ) அத்தேர்தல் மாவட்டத்தினை வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரித்து அத்தகைய வாக்கெடுப்புப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் வேறுபிரித்துக்காட்டும் எழுத்தினை அல்லது எழுத்துக்களை குறித்தொதுக்குதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவினையும் வாக்கெடுப்பு மாவட்டங்களாகத் துணைப்பிரிவுகளாய்ப் பிரித்து, அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும் வேறுபிரித்துக்காட்டும் இலக்கமொன்றைக் குறித்தொதுக்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) (i) தேர்தல் மாவட்டம் எவ்வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அவ்வாக்கெடுப்புப் பிரிவுகளையும், அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்புப்பிரிவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் எழுத்தினை அல்லது எழுத்துக்களையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவும் எவ்வாக்கெடுப்பு மாவட்டங்களாகத் துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அவ்வாக்கெடுப்பு மாவட்டங்களையும், அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்குமெனக் குறித்தொதுக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தையும்,

குறித்துரைத்து அறிவித்தலொன்றை கசெற்றில் வெளியிடுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் வேறுவகையில் பணித்தாலன்றி, வாக்கெடுப்புப் பிரிவொன்றினை வாக்கெடுப்பு மாவட்டங்களாக துணைப் பிரிவுகளாகப் பிரித்தலானது, அவ்வாறு துணைப்பிரிவுகளாகப் பிரிக்கும் நேரத்தில ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் ஆயிரத்தைந்நூறினை விஞ்சாத தேருநர்களைக் கொண்டிருக்கும் வகையில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) தேர்தல் மாவட்டமொன்று வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுதலும், வாக்கெடுப்புப் பிரிவொன்று வாக்கெடுப்பு மாவட்டங்களாகத் துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்படுதலும், சந்தருப்பம் தேவைப்படுத்துகின்றவாறாகப் பதிவு அலுவலரால் மாற்றப்படலாமெனபதுடன், அத்தகைய ஏதேனும் மாற்றம் செய்யப்படுவதனமேல், அத்தேர்தல் மாவட்டம் தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட விபரங்களைக் குறித்துரைத்து அறிவித்தலொன்றை அவர் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் மாற்றமானது அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான இடாப்பின் அடுத்த அத்தாட்சிப்படுத்துகை தொடர்பாக 20 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் வெளியீட்டுத் தேதியன்று பயனுக்கு வருதல் வேண்டும்; ஆனால் அத்தகைய அத்தாட்சிப்படுத்துகைக்கு முன்னர் அத்தகைய இடாப்பை மீளாய்தலானது, அத்தகைய மாற்றத்தின் அடிப்படையில் செய்யப்படலாம்.

## பாகம் III

## இடாப்புகளைத் தயாரித்தல்

இடாப்புகளைத் தயாரித்தல்.

10. (1) அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின் கீழான பிரகடனம் வெளியிடப்பட்டதன் பின்னரும், அத்துடன் 9 (1) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டபின்னரும் இயன்றளவு விரைவாக, அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கென இடாப்பொன்றினைத் தயாரித்து அல்லது தயாரிப்பித்து அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்; ஆனால் எப்படியிருப்பினும், அத்தகைய பிரகடனத்தினது வெளியீட்டிற்கு உடன் முன்னராக அத்தகைய தேர்தல் மாவட்டத்துள்ளடங்கிய பிரதேசம் தொடர்பாக நடைமுறையிலிருக்கும் இடாப்பொன்றில் அல்லது நடைமுறையிலிருக்கும் இடாப்பொன்றின் அத்தகைய பகுதிகளில், காணப்படும் ஒவ்வொரு பெயரும், நடைமுறையிலிருக்கும் இடாப்பின் எந்தக் தகைமையளிக்கும் முகவரியின்கீழ் அத்தகைய

பெயர் காணப்பட்டதோ அந்தத் தகைமையளிக்கும் முகவரியுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும் இடாப்பில் காணப்படுதல் வேண்டும்.

(2) பதிவு அலுவலர், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ்த் தயாரிக்கப்பட்ட இடாப்பொன்றில் அந்த உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நடைமுறையிலிருக்கும் இடாப்பில் அல்லது நடைமுறையிலிருக்கும் இடாப்பொன்றின் அப்பாகங்களில் தமது பெயர்கள் இல்லாதபோதிலும், தமது பெயர்களை, அவ்வாறு தயாரிக்கப்பட்ட இடாப்பில் பதிந்துகொள்வதற்குத் தகைமையுடையவர்களென அவர்காணும் ஆட்களின் பெயர்களைப் பதிந்துகொள்ளுதல் அல்லது பதிவித்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3) 9 ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்படுவதற்கு முன்னராக, அத்தகைய இடாப்பில் விண்ணப்பகாரர் தொடர்பில் வலுவிலுள்ள பதிவொன்றினைத் திருத்துவதற்காக, அத்தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு விண்ணப்பம் செய்யப்படலாமென்பதுடன், அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, பதிவு அலுவலரானவர், அவர் தக்கதெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னர், பதிவானது விண்ணப்பகாரர் தொடர்பானதெனவும், ஏதேனும் விபரத்தில் பிழையானது அல்லது குறைபாடுடையது எனவும் திருப்தியடைவாராயின், பதிவீட்டில் அவசியமான திருத்தத்தைச் செய்வித்தலும் வேண்டும்.

(4) 9 ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னராக, அதில் செய்யப்பட்டுள்ளதாகப் பதிவு அலுவலருக்குத் தோன்றும் ஏதேனும் எழுத்துப் பிழையை அவர் திருத்துவதை, இச்சட்டத்திலுள்ள எதுவும் தடை செய்வதாகக் கருதப்படுதலாகாது.

(5) இப்பிரிவில், " நடைமுறையிலிருக்கும் இடாப்பு " என்பது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் நியதிகளுக்கிணங்க அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் ஏதேனும் தேருநர் இடாப்பு எனப் பொருளாகும்.

11. (1) பத்தாம் பிரிவின்கீழ் இடாப்பொன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதன்மேல், இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அத்தகைய இடாப்பு அல்லது அதன் பிரதியொன்று நாளின் எல்லா நியாயமான நேரங்களிலும் பதிவு அலுவலரின் அலுவலகத்திலோ அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அம்மாவட்டத்தின் அத்தகைய வேறு இடத்திலோ பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது எனவும் பதிவு அலுவலரானவர் வர்த்தமானியிலும், தேசிய மொழிகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆகக்குறைந்தது ஒரு புதினப்பத்திரிகையிலும், அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டமை பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படுதல்.

(2) எதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பொன்றுனது, மேற்சொல்லப்பட்ட அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அடுத்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட இடாப்பு இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நடைமுறைக்கு வருவதன்மூலம் புறந் தொதுக்கப்படும்வரை அத்தகைய இடாப்பு நடைமுறையில் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

## பாகம் IV

## இடாப்புகளை மீளாய்தல்

இடாப்பை மீளாய்தல்.

12. (1) எதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான இடாப்பு 10ஆம் பிரிவின்கீழ், முதலில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர் ஒவ்வோர் ஆண்டினதும் யூன் முதலாம் நாளன்றோ அதற்கு முன்னரோ, ஆணையாளரானவர், அத்தகைய இடாப்பின், மீளாய்வைத் தொடங்கச்செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இடாப்பின் மீளாய்வு தொடங்கப்பட்டுள்ளதெனக் கூறுவதும், அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநரொருவராயிருப்பதற்குத் தகைமைகொண்டுள்ள ஒவ்வோர் ஆளுக்கும், அவர் எவ்வாறு அவரது பெயர் அத்தகைய இடாப்பில் உள்ளதா என்பதைக் கண்டறியலாமென்றும், அவ்வாறில்லாவிடின் அதன் பதிவீட்டை அவர் எவ்வாறு அதனகத்து இடுவித்துக்கொள்ளலாம் என்றும் தெரிவிப்பதும் ஆன அறிவித்தலொன்றை கசெற்றிலும், தேசிய மொழிகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆகக் குறைந்தது ஒரு புதினப்பத்திரிகையிலும் வெளியிடச்செய்தலும், அத்தகைய தேர்தல் மாவட்டத்தினுள் உள்ள பகிரங்க இடங்களில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கச்செய்தலும் வேண்டும்.

(2) இடாப்பை மீளாயும் நோக்கத்திற்கெனவும், பதிவுசெய்யப்படுவதற்கு எவரேனும் ஆளுக்குள்ள தகைமைகள் பற்றித் தம்மைத் திருப்திப்படுத்தும் நோக்கத்திற்கெனவும் அல்லது எவரேனும் ஆளின் பெயர் இடாப்பில் பதியப்படவேண்டுமா அல்லது அதைத் தொடர்ந்து வைத்திருத்தல்வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கும் நோக்கத்திற்கெனவும், பதிவு அலுவலரானவர், அவர் அவசியமெனக் கருதும் அத்தகைய வீட்டுக்குவீடு செய்யப்படும் விசாரணையை அல்லது வேறு விசாரணையை அவரே அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஆளொருவர் மூலம் செய்யலாம். அத்தகைய விசாரணையின் நோக்கத்திற்காக, பதிவு அலுவலரானவர், அவரது தேர்தல் மாவட்டத்தில் உள்ள எவரேனும் குடியிருப்பாளரை அல்லது எதேனும் காணியை அல்லது வளவுகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் அல்லது அதில் இருப்பாட்சி செய்யும் எவரேனும் ஆளை அல்லது அத்தகைய ஆளின் முகவரை, அத்தகைய ஆளின் அல்லது முகவரின் உடைமையிலுள்ளவையும் பதிவு அலுவலருக்குத் தேவைப்படக்கூடியவையுமான எவையேனும் தகவல்களை காலத்துக்குக்காலம் ஆணையாளரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் கொடுக்குமாறு தேவைப்படுத்தலாம். இவ்வுட்பிரிவின்கீழ் தகவலைத் தேவைப்படுத்துகின்றதும்

ஏதேனும் அறிவித்தலானது, தகவல் எவரிடமிருந்து தேவைப் படுகின்றதோ அவருக்கு சாதாரண அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட லாம் அல்லது அவரிடம் அல்லது அவர் குடியிருக்கும் வீட்டிலுள்ள வயது வந்த உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படலாம்.

(3) இலங்கை அரசாங்க சேவையிலுள்ள அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலுள்ள அல்லது ஏதேனும் உள்ளூ ரதிகாரசபையிலுள்ள (எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் இரகசியத்தைப் பேணுவதற்கான சத்தியம் ஒன்றின்மூலம் பிணிக் கப்பட்டவர்களான அத்தகைய சேவையில் உள்ள அலுவலர்கள் தவிர்ந்த) எல்லா அலுவலர்களும், இடாப்பை பதிவு அலுவலர் மீளாய்வதை இயலச் செய்வதற்கு, அவர் தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய எல்லாத் தகவல்களையும் அவருக்கு அளிக்க இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றனர் என்பதுடன் தேவைப்படுத்தப்படு கின்றனர்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை உடைமையில் கொண்டிருந்தும் அத்தகைய தகவலைப் பதிவு அலுவலருக்கு அல்லது பதிவு அலுவலரால் அந்நோக்கத் துக்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு கொடுக்கத் தவ றும் அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவலைக் கொடுக் கும் ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னராகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒருமாத காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண் டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) பதிவு அலுவலரொருவரால் நியமிக்கப்பட்டுள்ளவரும்.—

(அ) தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான எவரே னும் ஆளின் தகைமைகள் தொடர்பான ஏதேனும் தக வலை அல்லது எவரேனும் ஆளின் பெயர் இடாப்பில் பதியப்படவேண்டுமா அல்லது பதியப்படக்கூடாதா அல் லது தொடர்ந்து வைத்திருக்கப்படவேண்டுமா அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படக்கூடாதா என்பதைத் தீர்மானிப்பதற்கு தேவையான ஏதேனும் தகவலை, அத்த கைய தகவல் அவருக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அத்தகைய தகவல் அவரால் பெறப்பட்ட பின்னர் வேண்டுமென்றே வெளியிடுபவரும் அல்லது அத்தகைய தகவல் பொய்யானது எனத் தெரிந்துகொண்டே மேற்சொல்லப்பட்ட நோக்கத்திற்கு பொய் யான ஏதேனும் தகவலைக் கொடுப்பவருமான ; அல்லது

(ஆ) தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு உரித்துடைய வராயுள்ள எவரேனும் ஆளின் பெயரை, வேண்டுமென் றும், நியாயமான காரணமின்றியும் இடாப்பிலிருந்து நீக்கும் அல்லது நீக்கப்படச்செய்யும் அல்லது வேண்டு மென்றும், நியாயமான காரணமின்றியும் இடாப்பில்

பதியத்தவறுபவருயான அல்லது தொடர்ந்து வைத்திருக்கத் தவறுபவருமான,

ஒவ்வோர் அலுவலரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு மாத காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையில் ஒரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) ஏதேனுமாண்டில், ஏதேனும் இடாப்பின் மீளாய்வெதிலும், தாம் அல்லது வேறு எவரேனுமாள், அத்தகைய இடாப்பில் தம்முடைய பெயரை அல்லது அத்தகைய வேறு ஆளின் பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமையற்றவர் என அறிந்து கொண்டு, அத்தகைய இடாப்பில், விடயத்துக்கேற்றவாறு, தமது பெயரை அல்லது அத்தகைய வேறு ஆளின் பெயரைப் பதிவதற்கென அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கென உரிமைகோருகின்ற அல்லது விண்ணப்பிக்கின்ற அல்லது உரிமை கோர அல்லது விண்ணப்பிக்க அத்தகைய வேறு ஆளைத் தூண்டுகின்ற அல்லது அவ் ஆளுக்கு உதவி செய்கின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னராகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) (அ) ஆளொருவர், தமது பெயரை—

(i) ஒன்றுக்கு மேற்பட்ட இடாப்புகளில் ; அல்லது

(ii) ஒரே இடாப்பில் வெவ்வேறு தகைமையளிக்கும் முகவரிகளின்கீழ் ஒரு தடவைக்கு மேல்,

பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்துக்கொள்வதற்குத் தகைமை பெற்றுள்ளாரெனத் தோன்றுமிடத்து, பதிவு அலுவலரொருவர், அந்த ஆள், விடயத்துக்கேற்றவாறு, எந்த இடாப்பில் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றார் என்பதனை, அல்லது மேலே சொல்லப்பட்ட அதே இடாப்பில் எந்த தகைமையளிக்கும் முகவரியின் கீழ் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றார் என்பதனை அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் குறித்துரைக்குமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தும் அறிவித்தலொன்றை அவருக்கு சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் அறிவித்தல், அதற்கென (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் சேர்ப்பிக்கப்படலாம்.

(இ) பந்தி (அ) என்பதன் கீழான ஓர் அறிவித்தலுக்கிணங்கி யொழுகும் ஆளொருவர்—

(i) எந்த இடாப்பில் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றார் என்பதனைக் குறித்துரைத்திருந்து, அத்துடன் தோதான தேர்தல் மாவட்டத்துக்கான பதிவு அலுவலர், அத்தகைய ஆள் அந்த இடாப்பில் அவரது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க தகைமைபெற்றிருக்கின்றாரெனத் திருப்திப்படுமிடத்து, அவரது பெயர் அந்த இடாப்பில் பதியப்பட அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டுமேயொழிய வேறெந்த இடாப்பிலுமல்ல ; அல்லது

(ii) அந்த இடாப்பில் எந்தத் தனையைமயளிக்கும் முகவரியின்கீழ் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றார் என்பதனைக் குறித்துரைத்திருந்து, அத்துடன் அத்தகைய ஆள், அந்த இடாப்பில் அந்த முகவரியின் கீழ் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க தகைமை பெற்றிருக்கின்றார் எனப் பதிவு அலுவலர் திருப்திப்படுமிடத்து, அவரது பெயர் அந்த இடாப்பில் அந்த முகவரியின்கீழ் பதியப்பட அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டுமேயொழிய அந்த இடாப்பில் வேறெந்த முகவரியின் கீழும் அல்ல.

(ஈ) ஆளொருவர் (அ) என்னும் பந்தியின் கீழான அறிவித்தல் ஒன்றிற்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து—

(1) எந்த இடாப்பில் அத்தகைய ஆள் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றாரென்பதைக் குறித்துரைக்குமாறு அறிவித்தல் அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தியிருப்பின், எந்த இடாப்புகளில் அத்தகைய ஆள் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்கும் தகைமை பெற்றுள்ளாரோ அந்த இடாப்புகளுள் எந்த வோர் இடாப்பில் அத்தகைய பெயர் பதியப்பட வேண்டுமோ அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டுமோ அவ்வோர் இடாப்பு எவ்விடாப்பாதல் வேண்டும் என்பதனை ஆணையாளர் தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பெயர் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்ட அவ்விடாப்பில் பதியப்படுதலும் அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுதலும் வேண்டுமேயொழிய வேறெந்த இடாப்பிலும் அல்ல ; அல்லது

(ii) அதே இடாப்பில் எந்தத் தகைமையளிக்கும் முகவரியின் கீழ் அவர் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றாரென்பதனைக் குறித்துரைக்குமாறு அறிவித்தல் அவரைத் தேவைப்படுத்தியிருப்பின்; அதே இடாப்பில் எந்த தகைமையளிக்கும் முகவரிகளின்கீழ் அத்தகைய ஆள் தமது பெயரைப் பதிந்துகொள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்க தகைமை பெற்றுள்ளாரோ அந்த முகவரிகளுள் எந்த ஒரு முகவரியின் கீழ் அத்தகைய பெயர் பதியப்பட வேண்டுமோ அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டுமோ அந்த ஒரு முகவரி எம்முகவரியாதல் வேண்டும் என்பதனைப் பதிவு அலுவலர் தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பெயர் அந்த இடாப்பில் பதிவு அலுவலரால் தீர்மானிக்கப்பட்ட தகைமையளிக்கும் முகவரியின் கீழ் பதியப்படுதலும் அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுதலும் வேண்டுமேயொழிய அந்த இடாப்பில் வேறெந்த தகைமையளிக்கும் முகவரியின் கீழும் அல்ல.

(உ) பந்தி (அ) இன் கீழ் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கு எவரேனும் ஆள் இணங்கியொழுகத் தவறியமை அல்லது அந்த ஆள் தொடர்பில் ஆணையாளர் அல்லது பதிவு அலுவலரொருவர் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை, அல்லது அத்தகைய இணங்கியொழுகலின் மீது அவரது பெயர் ஏதேனும் இடாப்பில் அல்லது அதே இடாப்பில் அத்தகைய ஆளால் குறித்துரைக்கப்பட்ட தகைமையளிக்கும் முகவரியின் கீழ் அவரது பெயர் பதியப்படவில்லை அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படவில்லை என்ற நிகழ்வு, 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, விடயத்திற்கேற்ப, எவ்வேதேனும் இடாப்பில் அல்லது அதே இடாப்பில் எவ்வேதேனும் தகைமையளிக்கும் முகவரியின்கீழ், தமது பெயர் பதியப்பட அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட தகைமையுடையவராயுள்ளாரோ அவ்வேதேனும் இடாப்பில் அல்லது அதே இடாப்பில் அவ்வேதேனும் முகவரியின் கீழ் அவரது பெயர் பதியப்படுவதற்குள்ள அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதற்குள்ள உரிமையைப் பாதித்தலோ பங்கப்படுத்துதலோ ஆகாது.

இடாப்புக்களை மீளாய்வு செய்யும் முறை.

13. (1) ஒவ்வோர் ஆண்டும் இடாப்பை மீளாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பதிவு அலுவலர் வெவ்வேறான இரண்டு நிரல்களைத் தயாரித்தல் வேண்டும்; ஒன்று, இடாப்பில் இருக்கும் இறந்து போன ஆட்களின் பெயர்களை அல்லது அத்தகைய இடாப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகைமையளிக்கும் முகவரியின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையிழந்தவர்களாக வந்துள்ள அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகத் தகைமையிழந்துள்ள ஆட்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் (இது இதனகத்துப்பின்னர் " நிரல் அ " எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன், மற்றையது, இடாப்பில் தகைமையளிக்கும் முகவரியின்

கீழ் எலவே இடம் பெருதவர்களாய் இருந்து அல்லது வேறு வகையில் தகைமையற்றவர்களாயிருந்து, தகைமையளிக்கும் முகவரியொன்றின் கீழ், இடாப்பில் தம் பெயர்களைப் பதிந்து கொள்ளத் தகைமைகொண்டவர்களெனப் பதிவு அலுவலருக்குத் தோன்றுகின்றவர்களான ஆட்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் (இது இதனகத்துப்பின்னர் "நிரல் ஆ" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

அத்தகைய நிரல்களைத் தயாரித்தலானது, எதிர்வரும் ஆண்டின் சனவரி மாதம் முப்பத்தோராந் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவு அலுவலரால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இரண்டு நிரல்களும் பூர்த்தி செய்யப்பட்டதன்மேல், அத்தகைய நிரல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவென்றும், அத்துடன், இடாப்பும், அத்தகைய நிரல்களும் அல்லது அவற்றினது பிரதிகளும் அல்லது பொழிப்புகளும் பதிவு அலுவலரின் அலுவலகத்திலும், அறிவித்தலில் குறித்துரைக்கப்படற்பாலனவான தேர்தல் மாவட்டத்தின் அத்தகைய வேறு இடங்களிலும் நாளின் எல்லா நியாயமான நேரங்களிலும் பார்வையிடுதற்காக வைக்கப்பட்டுள்ளனவென்று பதிவு அலுவலரானவர் கஜெற்றிலும் அத்துடன் தேசிய மொழிகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆகக்குறைந்தது ஒரு புதினப் பத்திரிகையிலும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

இடாப்பை மீளாயும்போது செய்யப்படும் உரிமைக் கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும்.

**14.** (1) எதேனும் இடாப்பில், அந்த இடாப்பின் மீளாய்வொன்றின் போது, இச்சட்டத்திற்கிணங்கத் தம் பெயரைப் பதிந்து கொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குத் தகைமையுடையவரும், அத்துடன் அந்த இடாப்பில் இருப்பதும் "ஆ" என்னும் நிரலிலிருந்தும் தம் பெயர் விட்டுவிடப்பட்டவராக இருக்கின்றவரும், அல்லது "அ" என்னும் நிரலில் தம் பெயர் உள்ளடக்கப்பட்டவராக இருக்கின்றவரும், அத்துடன் இடாப்பில், விடயத்துக்கேற்றவாறு, தம் பெயரைப் பதிந்துகொள்வதற்கு, அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கு உரிமைக்கோரிக்கை செய்பவருமான ஆள் ஒவ்வொருவரும் (இவர் இப்பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் "உரிமைகோரிக்கையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்). தம் பெயரை அத்தகைய இடாப்பின் ஒரு தகைமையளிக்கும் முகவரியின்கீழ் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்குப் பதிவு அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வுட்பிரிவின்கீழான ஒவ்வொர் உரிமைக் கோரிக்கையும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "அ" என்னும் படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

(2) எதேனும் இடாப்பில் தம் பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமை கோருகின்றதற்கு ஆளொருவர் உரித்துடையவராய் இருக்குமிடத்து, இப்பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் "விண்ணப்பதாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவோரான வேறு எவரேனும் ஆள், முதற் கூறப்பட்ட ஆளின் பெயரை ஒரு தகைமையளிக்கும் முகவரியின்கீழ் அத்தகைய இடாப்பில்

பதிந்துகொள்வதற்கென அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதற்கென பதிவு அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வுட்பிரிவின்கீழான ஒவ்வோர் உரிமைக்கோரிக்கையும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதோடு பொருளளவில், இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள " ஆ " என்னும் படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வோர் உரிமைக்கோரிக்கையும், "அ" என்னும் நிரலும் "ஆ" என்னும் நிரலும் பூர்த்தி செய்யப்பட்டமை பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு கிழமைகளுக்குள் பதிவு அலுவலரைச் சென்றடையும் வண்ணம் செய்யப்படல் வேண்டும். ஒவ்வோர் உரிமைக்கோரிக்கையாளரின தம் பெயரையும் முகவரியையும் கொண்ட அறிவித்தல் ஒன்றை பதிவு அலுவலர் தம் அலுவலகத்தில் துலாம்பரமான இட மொன்றில் எழுத்துக்குக் காலம் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பிலோ அல்லது "ஆ" என்னும் நிரலிலோ தம் பெயர் தோன்றக்காணும் ஆள் எவரும், அத்தகைய இடாப்பில்—

(அ) தமது சொந்தப்பெயர் ; அல்லது

(ஆ) அத்தகைய இடாப்பிலோ அல்லது "ஆ" என்னும் நிரலிலோ காணப்படும் வேறு எவரேனும் ஆளின் பெயர் ; அல்லது

(இ) எவரேனும் உரிமைக்கோரிக்கையாளரின் பெயர்,

பதியப்படுவதை அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதை ஆட்சேபிக்கலாம்.

(5) இப்பிரிவிலும், 15 ஆம் பிரிவிலும் இடாப்பில், ஏதேனும் பெயர் பதியப்படுதலை அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுதலை ஆட்சேபிக்கும் ஆள் ஒவ்வொருவரும் "ஆட்சேபனையாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படுவர்.

(6) இடாப்பில் ஏதேனும் பெயர் பதியப்படுவதற்கு அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படுவதற்கு எதிராக (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்படும் ஆட்சேபனை ஒவ்வொன்றும், எழுத்தில், பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள " இ " என்னும் படிவத்திலான, இணைப்பிரதிகளில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், "அ" என்னும் நிரலும் "ஆ" என்னும் நிரலும் பூர்த்தி செய்யப்பட்டமை பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு கிழமைகளுக்குள் பதிவு அலுவலரைச் சென்றடையும்வண்ணம் செய்யப்படுதலும் வேண்

டும். ஒவ்வோர் ஆட்சேபனையாளரினதும், அத்துடன் எந்த ஆள் தொடர்பில் அத்தகைய ஆட்சேபனை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த ஆளினதும் பெயரையும் முகவரியையும் கொண்ட அறிவித்தல் ஒன்றை பதிவு அலுவலர் தமது அலுவலகத்தில் துலாம்பரமான ஓர் இடத்தில் காலத்துக்குக்காலம் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ், இடாப்பில் எவரேனும் உரிமைக்கோரிக்கையாளரின் பெயர் பதியப்படுவதற்கு எதிராக எழுப்பப்படும் ஆட்சேபனை ஒவ்வொன்றும், எழுத்தில், இணைப் பிரதியில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "ஈ" என்னும் படிவத்தில் இருத்தலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய உரிமைக்கோரிக்கையாளரின் பெயரைக் கொண்ட அறிவித்தல் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிக்காட்டி வைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பதிவு அலுவலரைச் சென்றடையும் வண்ணம் செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வோர் ஆட்சேபனையாளரினதும், அத்துடன் எந்த ஆள் தொடர்பில் அத்தகைய ஆட்சேபனை செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளினதும் பெயரையும் முகவரியையும் கொண்ட அறிவித்தல் ஒன்றை பதிவு அலுவலர் தமது அலுவலகத்தில் துலாம்பரமான ஓர் இடத்தில் காலத்திற்குக் காலம் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(8) உட்பிரிவின்கீழான ஆட்சேபனையொன்றை பதிவு அலுவலர் பெற்றுக்கொண்டபின்னர், சாத்தியமானளவு விரைவில், அந்த ஆட்சேபனையின் பிரதியொன்றை, எந்த ஆள் தொடர்பாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ, அந்த ஆளுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(9) பதிவு அலுவலர், முறையாகச் செய்யப்பட்டிருக்கும் எல்லா உரிமைக் கோரிக்கைகள் மீதும் ஆட்சேபனைகள் மீதும், சாத்தியப்படக்கூடிய விரைவில், பகிரங்க விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும். விசாரணை தொடங்கும் தேதியையும், நேரத்தையும் இடத்தையும் பற்றியதும், ஏழு முழு நாட்களுக்குக் குறையாததுமான எழுத்திலான அறிவித்தல், ஒவ்வோர் உரிமைக் கோரிக்கையாளருக்கும், விண்ணப்பகாரருக்கும், ஆட்சேபனையாளருக்கும், அத்துடன் எந்த ஆள்தொடர்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்கும் பதிவு அலுவலரால் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய எதேனும் பகிரங்க விசாரணையின் போது, விசாரணையின் விடயப்பொருளில் அக்கறையுடையவர் அல்லது அதனால் பாதிக்கப்படுபவர் எனப் பதிவு அலுவலருக்குத் தோன்றும் ஆளெவரும், தாமே அல்லது அவரால் முறையாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஓர் ஆளூடாகத் தோன்றலாம் என்பதுடன், கேட்கப்படலாம் :

ஆயின், பதிவு அலுவலர், எந்த உரிமைக்கோரிக்கை தொடர்பில் ஆட்சேபனை எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லையோ அந்த உரிமைக்கோரிக்கை அனுமதிக்கப்படல் வேண்டும் என்று தாம்

வேறுவிதத்தில் திருப்திப்பட்டால், மேற்கூறப்பட்டவாறான பகிரங்க விசாரணை எதுவுமின்றி, அத்தகைய உரிமைக் கோரிக்கையை அனுமதிக்கலாம் என்பதுடன், உரிமைக்கோரிக்கையாளரின் பெயரை இடாப்பிற் பதிதலும் வேண்டும் :

ஆயின், மேலும், மேற்கூறப்பட்டவாறான ஏதேனும் பகிரங்க விசாரணையில் எவரேனும் உரிமைக்கோரிக்கையாளரை, விண்ணப்பகாரரை, ஆட்சேபணையாளரை அல்லது எந்த ஆள் தொடர்பாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளை, தாமே அல்லது அதற்கென முறையாக அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள்மூலமாகத் தோன்றுமாறு எழுத்திலான அறிவித்தல் மூலம் பணித்தல் அவசியம் என்று பதிவு அலுவலர் கருதினால், அவரை அவ்வாறு தோன்றுமாறு பதிவு அலுவலர் பணிக்கலாம் ; அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறினால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(10) ஏற்பிரிவின்கீழ், ஆட்சேபனையொன்று செய்யப்படுகின்றவிடத்து, பதிவு அலுவலர், ஆட்சேபனையாளரை அல்லது ஆட்சேபனையாளரால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமொரு ஆளை அத்தகைய பதிவு அலுவலர் திருப்தியடையும் வண்ணம் ஆட்சேபனைக்கான ஏதுபற்றிய எண்பிப்பைக் கொடுக்கும்படி அழைத்தல் வேண்டும்.

(11) ஏற்பிரிவின்கீழ், பதிவு அலுவலர் திருப்தியடையும் வண்ணம் ஆட்சேபனை ஏது பற்றிய எண்பிப்பு கொடுக்கப்படின், எந்த ஆள் தொடர்பில் அவ்வாட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளின் தகைமை பற்றிய எண்பிப்பை பதிவு அலுவலர் தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன்,—

(அ) அத்தகைய ஆளின் தகைமை, பதிவு அலுவலர் திருப்தியடையும் வண்ணம் எண்பிக்கப்படவில்லையாயின், அத்தகைய அலுவலர், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய ஆளின் பெயரை இடாப்பிலிருந்து நீக்குதலும் வேண்டும், அல்லது அத்தகைய ஆளின் பெயரை இடாப்பில் பதிய மறுத்தலும் வேண்டும் ;

(ஆ) அத்தகைய ஆளின் தகைமை எண்பிக்கப்படுமாயின், அத்தகைய அலுவலர் அத்தகைய ஆளின் பெயரை இடாப்பில் பதிதலும் வேண்டும், அல்லது தொடர்ந்து வைத்திருத்தலும் வேண்டும்.

(12) எதேனும் ஆட்சேபனை பற்றிய விசாரணைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, ஆட்சேபனையாளர் அல்லது ஆட்சேபனையாளரால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் தோன்றத் தவறினால், அல்லது தோன்றியிருந்து பதிவு அலுவலர் திருப்தியடையும் வண்ணம் எண்பிப்பைக் கொடுக்கத் தவறினால், அப்பொழுது,—

(அ) ஆட்சேபனையானது, இடாப்பில் காணப்படும் ஆளொருவன் பெயரை அதனைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கானதாகவோ அல்லது "ஆ" என்னும் நிரலிற் காணப்படும் ஆள் ஒருவரின் பெயரை இடாப்பில் பதிவதற்கானதாகவோ இருந்தால், பதிவு அலுவலர் அத்தகைய ஆளை அவர்தம் தகைமையை எண்பிக்குமாறு அழைக்காமலேயே, அத்தகைய ஆளின் பெயரை விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய இடாப்பில் தொடர்ந்து வைத்திருத்தல் வேண்டும் அல்லது பதிதல் வேண்டும் ;

(ஆ) ஆட்சேபனையானது, எவரேனும் உரிமைக்கோரிக்கையாளரின் பெயரை இடாப்பில் பதிவதற்கானதாக இருந்தால், பதிவு அலுவலர், உரிமைக்கோரிக்கையாளரின் தகைமை பற்றிய எண்பிப்பைத் தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன்—

(i) உரிமைக்கோரிக்கையாளரின் தகைமை, பதிவு அலுவலர் திருப்தியடையும் வண்ணம் எண்பிக்கப்படவில்லையாயின், அவர் உரிமைக்கோரிக்கையாளரின் பெயரை அத்தகைய இடாப்பில் பதியாதிருத்தலும் வேண்டும் ;

(ii) உரிமைக்கோரிக்கையாளரின் தகைமை அவ்வாறு எண்பிக்கப்படுமாயின், பதிவு அலுவலர் உரிமைக்கோரிக்கையாளரின் பெயரை அத்தகைய இடாப்பில் பதிதலும் வேண்டும்.

(13) எதேனும் ஆட்சேபனை செய்யப்பட்டு, பதிவு அலுவலரால் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதோடு, அவரின் அபிப்பிராயப்படி, அந்த ஆட்சேபனையானது நியாயமான காரணமில்லாமற் செய்யப்பட்டிருப்பின், பதிவு அலுவலர், அவர் தகுந்ததென்று எண்ணினால், எந்த ஆள் தொடர்பாக அந்த ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளினால் ஆட்சேபனையின் விளைவாக உறப்பட்ட எதேனும் கால இழப்புக்கான நியாயமான நட்டஈடு என்று பதிவு அலுவலர் கருதுவதும் ஐம்பது ரூபாவை விஞ்சாததுமான அத்தகைய பணத்தொகையை அத்தகைய ஆளுக்குச் செலுத்தும்படி ஆட்சேபனையாளருக்குக் கட்டளையிடலாம்.

(14) ஆட்சேபனையொன்று தள்ளுபடி செய்யப்பட்டதன்மீது ஆட்சேபனையாளர் 15 ஆம் பிரிவின்கீழ் மீளாய்வு அலுவலருக்கு மேன்முறையீடு செய்து, அந்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டிருப்பதோடு, மீளாய்வு அலுவலரின் அபிப்பிராயப்படி அம்மேன்

முறையீடு நியாயமான காரணம் இல்லாமல் செய்யப்பட்டும் இருப்பின், மீளாய்வு அலுவலர், அவர் தகுந்ததென்று எண்ணினால், எந்த ஆள் தொடர்பாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதோ, அந்த ஆளினால், மேன்முறையீட்டின் விளைவாக உறப்பட்ட ஏதேனும் கால இழப்புக்கான நியாயமான நட்டஈடு என்று மீளாய்வு அலுவலர் கருதுவதான, ஐம்பது ரூபாவை விஞ்சாததுமான அத்தகைய பணத்தொகையை அத்தகைய ஆளுக்குச் செலுத்தும்படி ஆட்சேபனையாளருக்குக் கட்டளையிடலாம். மேற்கூறப்பட்டவாறான ஏதேனும் மேன்முறையீடு மீளாய்வு அலுவலரால் அனுமதிக்கப்படுமாயின், ஆட்சேபனையாளரால் நட்டஈடு செலுத்தப்படுவதற்கென பதிவு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை மீளாய்வுசெய்வதற்கு அல்லது இல்லாததாக்குவதற்கு மீளாய்வு அலுவலர் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

(15) இப்பிரிவின்கீழ் நட்டஈடாக வழங்கப்பட்ட ஏதேனும் பணத் தொகை, பதிவு அலுவலரின் அல்லது மீளாய்வு அலுவலரின் கட்டளையானது நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்று என்றுற்போன்று அறவிடற்பாலதாதல் வேண்டும்.

(16) ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது ஆட்சேபனை தொடர்பாக, இப்பிரிவின்கீழ் பதிவு அலுவலர் ஒருவரால் செய்யப்படுகின்ற ஏதேனும் முடிவு, ஒவ்வோர் உரிமைக்கோரிக்கையாளருக்கும் விண்ணப்பகாரருக்கும், ஆட்சேபனையாளருக்கும் அல்லது ஆட்சேபனை எந்த ஆள் பற்றி செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளுக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படலாம்.

மீளாய்வு அலுவலருக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்.

15. (1) ஏதேனும் உரிமைக்கோரிக்கையாளர், விண்ணப்பகாரர் ஆட்சேபனையாளர் அல்லது எந்த ஆள் தொடர்பாக ஆட்சேபனையொன்று செய்யப்பட்டிருக்கிறதோ அந்த ஆள், பதிவு அலுவலரின் முடிவினால் அதிருப்தியடைவாராயின், அவர், அத்தகைய முடிவு பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அம்முடிவுக்கெதிராக மீளாய்வு அலுவலருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன் மேன்முறையீட்டின் எதுக்களைச் சுருக்கமாக எடுத்துரைத்தல் வேண்டுமென்பதுடன், ஐந்து ரூபா பெறுமதிகொண்ட முத்திரையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட திறத்தவர்களுக்கு மேன்முறையீடு கேட்கப்படும் தேதி பற்றிய அறிவித்தலைக் கொடுத்து, பகிரங்க நீதிமன்றத்திலோ, அல்லது அலுவலகத்திலோ மீளாய்வு அலுவலர் அத்தகைய மேன்முறையீட்டைக் கேட்டல் வேண்டும். ஏதேனும் சான்றைக் கேட்டதா அல்லவா என்பது அவரின் தற்றுணிவின் பேரில் இருத்தல் வேண்டும். மேன்முறையீடு பற்றிய அவரின் தீர்மானம் இறுதியானதாய் இருத்தல் வேண்டும்.

(4) எதேனும் இடாப்பு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளை மீளாய்வு அலுவலர் தீர்மானித்த பொழுது, இடாப்பில் எப்பெயர்கள் பதியப்படல் வேண்டும் அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படல் வேண்டும் என அவர் தீர்மானித்துள்ளாரோ அப்பெயர்களையும், அத்துடன் எப்பெயர்கள் இடாப்பிலிருந்து நீக்கப்படல் வேண்டுமென அவர் தீர்மானித்துள்ளாரோ அப்பெயர்களையும் கொண்டதும் அவரால் எழுதப்பட்டதுமான கூற்றொன்றை பதிவு அலுவலருக்கு அவர் அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் பதிவு அலுவலர் இடாப்பைத் திருத்துதலும் வேண்டும்.

(5) மேன்முறையீடு ஒன்று அனுமதிக்கப்படுமாயின், (2) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட ஐந்து ரூபா பணத்தொகை மேன்முறையீட்டாளருக்கு மீளளிக்கப்படல் வேண்டும்.

பொய்க்கூற்றுகளும் பிழையான உரிமைக் கோரிக்கைகளுக்குமான தண்டம்.

16. (1) எதேனும் உரிமைக்கோரிக்கையில் அல்லது ஆட்சேபனையில் அல்லது அத்தகைய உரிமைக்கோரிக்கை அல்லது ஆட்சேபனை தொடர்பில் நடாத்தப்படும் எதேனும் விசாரணையில் அல்லது எதேனும் மேன்முறையீட்டில் வேண்டுமென்றே பொய்க் கூற்றொன்றை அல்லது வெளிப்படுத்துகையைச் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நூறு ரூபாவை விஞ்சாததொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

(2) எதேனும் விண்ணப்பத்தை, உரிமைக்கோரிக்கையை, ஆட்சேபனையை அல்லது மேன்முறையீட்டை விசாரிக்கும்போது அல்லது கேட்கும்போது எவரேனும் ஆளினால் அளிக்கப்படும் சான்றானது, உறுதியுரையின்மேல் அல்லது சத்தியத்தின்மேல் கொடுக்கப்படல் வேண்டுமென பதிவு அலுவலர் ஒருவர் அல்லது மீளாய்வு அலுவலர் ஒருவர் தேவைப்படுத்தலாமென்பதுடன், அந்நோக்கத்துக்காக அத்தகைய உறுதியுரையை அல்லது சத்தியத்தை எடுப்பிப்பதற்கு அவர் அதிகாரமுடையவருமாவார்; அத்துடன், அத்தகைய விசாரணையின் போது அல்லது கேட்பின் போது, அத்தகைய விண்ணப்பத்தின், உரிமைக்கோரிக்கையின், ஆட்சேபனையின் அல்லது மேன்முறையீட்டின் நோக்கத்துக்கு முக்கியமானதான எதனையும், பொய்யானதென்று தெரிந்து கொண்டே உறுதிப்படுத்தும் அல்லது சத்தியம் செய்யும் ஆள் ஒவ்வொருவரும், பொய்ச்சான்றளித்தல் ஆகிய குற்றத்திற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், தண்டனைச் சட்டக்கோவையில் அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

செவ்வையற்ற தகைமையளிக்கும் முகவரிக்குப் பதிலாக செவ்வையான தகைமையளிக்கும் முகவரியைப் பதிவு அலுவலர் இடுதல்

17. பதினைந்தாம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவின்கீழான எதேனும் விசாரணையின்போது பதிவு அலுவலர் ஒருவர்,—

(அ) இடாப்பொன்றில் ஆளொருவரின் பெயர் செவ்வையற்ற தகைமையளிக்கும் முகவரியின்கீழ்க் காணப்படுகின்றது என்று திருப்திப்படுமிடத்து, அத்தகைய இடாப்பில் அவ்வாள் தொடர்பான பதிவீட்டில் அத்தகைய முகவரிக்குப் பதிலாக தம்மால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான செவ்வையான தகைமையளிக்கும் முகவரியை இடலாம் ; அல்லது

(ஆ) இடாப்பொன்றில் பெயர் பதியப்படவிருக்கும் ஆளொருவரின் செல்லுபடியான தகைமையளிக்கும் முகவரியானது, அவரால் அல்லது அவரின் சார்பில் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முகவரியல்ல என்று திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆளின் செல்லுபடியான தகைமையளிக்கும் முகவரியென அத்தகைய அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு முகவரியின்கீழ் அத்தகைய ஆளின் பெயரை அந்த இடாப்பில் அத்தகைய அலுவலர் பதியலாம்.

பதிவு அலுவலர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல்.

18. (1) உரிமைக்கோரிக்கைகளின்மேலும் ஆட்சேபனைகளின்மேலும் தீர்ப்பளிக்கப்பட்டபின்னர், வசதியாகக் கூடியவாறான அளவளவு விரைவில், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர், அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் :

ஆயின், 15 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் மேன்முறையீடு முடிவுறுதிருக்கும்போது, இப்பிரிவிற்கிணங்க, பதிவு அலுவலர், இடாப்பு எதனையும் அத்தாட்சிப்படுத்தலாம் என்பதுடன், அதன்பின்னர், அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டதன்மேல் மீளாய்வு அலுவலரின் முடிபுக்கிணங்க, அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட இடாப்பில், எவரேனும் ஆளின் பெயரைப் பதிதலும் வேண்டும்; அல்லது அத்தகைய இடாப்பிலிருந்து எவரேனும் ஆளின் பெயரை நீக்குதலும் வேண்டும்.

(2) இடாப்பு எதனையும் அத்தாட்சிப்படுத்துவதற்குமுன்னராக, அதில் செய்யப்பட்டுள்ளதாக பதிவு அலுவலருக்குத் தோன்றும் ஏதேனும் எழுத்துப் பிழையை அவர் திருத்துவதை இச்சட்டத்திலுள்ள எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

(3) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பு அத்தாட்சிப் படுத்தப்படுவதற்கு முன்னர், அந்த இடாப்பில் விண்ணப்பகாரர் தொடர்பாக, ஏற்கனவே உள்ள ஒரு பதிவீட்டைத் திருத்துவதற்கான விண்ணப்பம் அந்த மாவட்டத்தின் பதிவு அலுவலருக்குச் செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, தாம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னர், பதிவீடானது விண்ணப்பகாரர் தொடர்பிலானது எனவும் ஏதேனும் விபரத்தில் வழுவுள்ளதாக அல்லது குறைபாடுள்ளதாக இருக்கின்றதெனவும் பதிவு அலுவலர் திருப்தியடைவாரெனின், அவர் பதிவீட்டில் அவசியமான திருத்தத்தைச் செய்வித்தல் வேண்டும்.

பதிவு அலுவலர்களினதும் மீளாய்வு அலுவலர்களினதும் அறிவித்தல்களும் ஒத்திவைத்தல்களும்.

19. (1) பதிவு அலுவலர் ஒருவரால் அல்லது மீளாய்வு அலுவலர் ஒருவரால் அனுப்பப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா அறிவித்தல்களும், உரிமைக்கோரிக்கையில் அல்லது ஆட்சேபனையில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு (அப்படி எதுவும் இருந்தால்), அல்லது அத்தகைய முகவரியைக் கொடுக்கத் தவறப்பட்டிருக்குமிடத்து, இடாப்பிற் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு, பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுமாயின், போதியவாறு கொடுக்கப்பட்டிருப்பதாதல் வேண்டும்.

(2) பதிவு அலுவலர் ஒருவர் அல்லது மீளாய்வு அலுவலர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் அவர் முன்னிலையில் நடைபெறும் எவையேனும் நடவடிக்கைகளை, வசதியான ஏதேனும் நேரத்திலும் இடத்திலும் நடைபெறுவதற்கென காலத்துக்குக் காலம் ஒத்திவைக்கலாம்.

20. (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் ஏதேனும் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன்மேல், இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அத்தகைய இடாப்பு அல்லது அதன் பிரதியொன்று பதிவு அலுவலரின் அலுவலகத்தில் அல்லது அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக மாவட்டத்தில் உள்ள அத்தகைய வேறு இடத்தில், நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் பார்வையிடுதற்காக வைக்கப்பட்டுள்ளதென்றும் பதிவு அலுவலர் கசெற்றிலும் அத்துடன் தேசியமொழிகள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆகக்குறைந்தது ஒரு பத்திரிகையிலும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

இடாப்பு அத்தாட்சிப் படுத்தல் பற்றிய அறிவிப்பும் அது தொடங்குதலும் அதன் நடைமுறைக் காலப்பகுதியும்.

(2) மேற்கூறப்பட்ட அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான அத்தாட்சிப் படுத்தப்பட்ட இடாப்பு நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதோடு, 15 (4) ஆம் அல்லது 18 ஆம் பிரிவுக்கிணங்க, அதனைத்தே பின்னர் செய்யப்படக்கூடியவாறான (அப்படி ஏதேனும் இருப்பின்), அத்தகைய மாற்றங்களுக்கு அமைய அத்தகைய இடாப்பானது, அடுத்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட இடாப்பு நடைமுறைக்கு வருவதனால் புறத்தொதுக்கப்படும் வரைக்கும் தொடர்ந்து நடைமுறையில் இருத்தலும் வேண்டும்.

## பாகம் V

## பொது

21. (1) இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்படவேண்டுமென, அல்லது மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பொன்று, அவசியமானவிடத்து, வசதியாகக் கூடியவாறாக அத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட பாகங்களாகத் தொகுக்கப்பட்டும் பேணப்பட்டும் வரப்படலாம். அத்தகைய பாகங்களை ஒன்றாகச் சேர்த்த மொத்த எண்ணிக்கை அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

இடாப்பைத் தொகுத்தலும் இடாப்பின் மொழியும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட வேண்டுமென அல்லது மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான இடாப்பொன்று, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையத் தனித்தனியே ஒவ்வொரு தேசிய மொழியிலும் தொகுக்கப்பட்டுப் பேணி வரப்படுதல் வேண்டும்.

**இடாப்பிலிருந்து நீக்கிவிடப்பட்ட பெயரைப் பதிதல்.**

22. அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையின் (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுள் ஏது காரணமாகவேனும் தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கான தகுதியின்மைக்கு உட்பட்டவராக இருப்பதனால், அவரது பெயர் ஏதேனும் இடாப்பிலிருந்து நீக்கிவிடப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள், அந்தத் தகுதியின்மைக்கு உட்பட்டவராக இல்லாதொழியுமிடத்து, அப்பொழுது, அவர், எந்தவொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலருக்கு அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான இடாப்பில் தம்முடைய பெயரைப் பதிந்துகொள்வதற்கு எழுத்திலான விண்ணப்பமொன்றினைச் செய்வாராயின், அத்துடன் அத்தகைய இடாப்பில் அவரது பெயரைப் பதிந்துகொள்வதற்கு அத்தகைய ஆள் தகைமையுடையவராக இருக்கின்றார் என்று பதிவு அலுவலர் திருப்தியடைவாராயின், அத்தகைய ஆளின் பெயர் அத்தகைய இடாப்பிற் பதியப்படுதல் வேண்டும். அவ்வாறு பதியப்படுகின்ற நேரத்தில், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய இடாப்பின் தயாரிப்பு, மீளாய்வு அல்லது அத்தாட்சிப்படுத்துகை முடிவடைந்திருக்காவிடினும் அத்தகைய இடாப்பில் அத்தகைய பெயரின் பதிவீடு பயனுடையதாதல் வேண்டும்.

**பதிவு அலுவலர் குறித்த சில விபரங்களை ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல்.**

23. (1) ஒவ்வொரு பதிவு அலுவலரும், 10 ஆம் அல்லது 18 ஆம் பிரிவின்கீழ் இடாப்பொன்று அவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர் கூடிய விரைவில், அத்தகைய இடாப்பில் பெயர் காணப்படுகின்ற தேருநர்களின் மொத்த எண்ணிக்கையை தருகின்ற கூற்றொன்றை, ஆணையாளரால் அதன் சார்பில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) பதினைந்தாம் அல்லது 22 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் இடாப்பில் ஏதேனும் பெயர் பதியப்பட்டிருக்கின்றவிடத்து, அல்லது 15 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய இடாப்பிலிருந்து ஏதேனும் பெயர் நீக்கப்பட்டிருக்கின்றவிடத்து, பதிவு அலுவலர், அத்தகைய இடாப்பில் பெயர் காணப்படுகின்ற தேருநர்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய திருத்தப்பட்ட கூற்றொன்றை ஆணையாளரால் அதன்சார்பில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

**ஆணையாளரின் தத்துவங்களும் கடமைகளும்.**

24. ஆணையாளர்—

(அ) தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பிலான நிருவாக நடாத்துகை மீது பொதுவான பணிப்பாண்மையையும் கண்காணிப்பையும் பிரயோகித்தல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறும் வகையில் நிறைவேற்றுதலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவை என அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும், உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும், தேருநர் இடாப்புக்களைத் தயாரிக்கும் அல்லது மீளாய்வு செய்யும் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட பதிவு அலுவலர்களுக்கும், வேறு அலுவலர்களுக்கும் வழங்குவதற்குத் தத்துவம் உடையவராய் இருத்தல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சாட்டப்பட்ட வேறு எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

ஆட்களும் இடங்களும் பற்றிய செம்மையற்ற விவரணம்.

25. இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எத்தகையதுமான ஏதேனும் இடாப்பில், நிரலில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட எவரேனும் ஆளைப்பற்றிய அல்லது இடத்தைப்பற்றிய பிறழ் பெயர் அல்லது செம்மையற்ற விவரணம் எதுவும், அந்த ஆள் பற்றி அல்லது இடம் பற்றி அடையாளம் காணக்கூடிய வாறான அத்தகைய முறையில் அத்தகைய இடாப்பில், நிரலில், அறிவித்தலில் அல்லது ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், இச்சட்டத்தின் நடைமுறையையோ அல்லது அந்த ஆள் அல்லது இடம் தொடர்பில், அத்தகைய இடாப்பின், நிரலின், அறிவித்தலின் அல்லது வேறு ஆவணத்தின் செல்லுபடியாந் தன்மையையோ எவ்விதத்திலேனும் பாதித்தல் ஆகாது.

அறிவித்தல்களையும் இடாப்புக்களையும் வேறு ஆவணங்களையும் வெளியிடுதல்.

26. (1) ஏதேனும் அறிவித்தல், இடாப்பு அல்லது வேறு ஆவணம் வெளியிடப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டு அத்துடன், அத்தகைய அறிவித்தலை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை வெளியிடும்படி தேவைப்படுத்தப்பட்ட அதிகாரியின் அபிப்பிராயப்படி வெளியிடப்பட்ட முறையானது அத்தகைய அறிவித்தலுக்கு, இடாப்புக்கு அல்லது வேறு ஆவணத்துக்குப் போதிய விளம்பரத்தைக் கொடுக்காதிருக்குமிடத்து, அவர், இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய அறிவித்தலை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை வெளியிடுவதுடன், மேலதிகமாக அத்தகைய அறிவித்தல் எந்த இடாப்பு அல்லது வேறு ஆவணம், தேர்தல் மாவட்டம் தொடர்பிலானதோ, அந்தத் தேர்தல் மாவட்டத்தினுள் துலாம்பரமான இடங்களில் அத்தகைய அறிவித்தலின், இடாப்பின் அல்லது வேறு ஆவணத்தின் பிரதிகளை வெளிக்காட்டி வைக்கலாம் அல்லது பார்வையிடுதற்கென வைக்கலாம் அல்லது அவற்றிற்கு விளம்பரம் கொடுப்பதற்கு அவசியமானவையென அவர் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு நடபடிகளை அவர் எடுக்கலாம்.

(2) இச்சட்டத்திற்கிணங்க வெளிக்காட்டி வைக்கப்பட்ட அல்லது பார்வையிடுதற்கென வைக்கப்பட்ட அறிவித்தல், இடாப்பு அல்லது வேறு ஆவணம் எதையும், சட்டபூர்வமான அதிகாரம் இல்லாமல் அழிக்கின்ற, சிதைக்கின்ற, உருமாற்றுகின்ற அல்லது அகற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும், அல்லது ஏதேனும் அறிவித்தலை, இடாப்பை அல்லது வேறு ஆவணத்தை அல்லது அவற்றின் பிரதிகளை இச் சட்டத்தின் கீழ் வெளிக்காட்டி வைக்கத்தவறுகின்ற அல்லது பார்வையிடுதற்கென வைக்கத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நீக்கங்களும் நிலைமாறுகால ஏற்பாடுகளும்.

27. (1) 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் II ஆம், III ஆம் பாகங்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், சொல்லப்பட்ட அரசப் பேரவைக் கட்டளையின்கீழ் மீளாய்வு செய்யப்பட்டதும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று நடைமுறையிலிருக்கின்றதுமான தேருநர் இடாப்பு எதுவும், இச்சட்டத்தின்கீழ் தேருநர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டு, அத்தாட்சிப்படுத்தப்பட்டு, நடைமுறைக்கு வரும் வரைக்கும், தொடர்ந்து நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(3) முதலாவது பொதுத் தேர்தல், அரசியலமைப்பின் 162ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சூழ்நிலைகளில் நடாத்தப் பெறவுள்ளவிடத்து, அந்த உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் தொடர்பிலும் பயன்படுத்தப் படவேண்டிய இடாப்பானது, முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று, சொல்லப்பட்ட அரசப் பேரவைக் கட்டளையின் கீழ் நடைமுறையிலிருந்த தேருநர் இடாப்புகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

28. (1) இடாப்பொன்றின் மீளாய்வு, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 16 ஆம் பிரிவின்கீழ் தொடங்கப்பட்டிருந்து அத்துடன் அரசியலமைப்பின் 97ஆம் உறுப்புரையின்கீழ் பிரகடனம் வெளியிடப்படும் தேதியன்று முடிவாக்கப்படாமல் இருக்கின்றவிடத்து, அத்தகைய பிரகடனம் வெளியிடப்பட்டதன் மீது, அத்தகைய மீளாய்வு இச்சட்டத்தின் III ஆம் பாகத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட இடாப்பொன்றின் மீளாய்வொன்று என்றுற்போன்று அத்தகைய மீளாய்வானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தொடரப்பட்டு முடிவாக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, மேற்சொல்லப்பட்ட அரசப் பேரவைக் கட்டளையின்கீழ் அத்தகைய மீளாய்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடபடி எதுவும், இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடபடியொன்றாக எல்லாநோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 97ஆம் உறுப்புரையின்கீழ் பிரகடனத்தை வெளியிடுவதற்கு முன்னர் உளதாகிய ஏதேனும் தேர்தல் மாவட்டம் சம்பந்தமான இடாப்பொன்றின் மீளாய்வு தொடர்பில் ஏதேனும் ஆவணத்திலுள்ள குறிப்பீடு ஒவ்வொன்றும், அவ்வாறு பிரகடனம் வெளியிடப்பட்டதன் மேல், அத்தகைய பிரகடனம் வெளியிடப்படுதற்கு முன்னர் உளதாகிய தேர்தல் மாவட்டம், அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட எந்தத் தேர்தல் மாவட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்துள்ளதோ, அந்தத் தோதான தேர்தல் மாவட்டம் பற்றிய குறிப்பீடொன்றென வாசிக்கப்படுதலும் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

29. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினலொழிய— பொருள்கோடல்.

"தேர்தல்கள் ஆணையாளர்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் என்று பொருளாகும் ;

"தேருநர்" என்பது, இச்சட்டத்தின் கீழ் தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்பட உரித்துடைய ஆளொருவர் என்று பொருளாகும் ;

"தேர்தல் மாவட்டம்" என்பது, அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின்கீழ் செய்யப்பட்ட பிரகடனமொன்றில் குறித்துரைக்கப்பட்ட தேர்தல் மாவட்டமொன்று என்று பொருளாகும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினல் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும், நிறைவேற்றப்படும் பணிகளையும், புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் :

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்படுவதும், மானியக்கொடையென்றவகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினுல் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடையதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும் ;

"தேருநர் இடாப்பு" என்பது, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்கள் இடாப்பு எனப் பொருளாகும்; அத்துடன்,

"மீளாய்வு அலுவலர்" என்பது—

(அ) உரிமைக்கோரிக்கையாளர் ஒருவர் தொடர்பில், அவர் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றரோ அந்த மாவட்ட நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதி எனப் பொருளாகும் ;

(ஆ) ஆட்சேபனையாளர் ஒருவர் தொடர்பில், எந்த ஆளுக்கு எதிராக ஆட்சேபனையொன்று செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த ஆள் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றரோ அந்த மாவட்ட நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதி எனப் பொருளாகும்.

## அட்டவணை

### படிவம் அ

### பிரிவு 14 (1)

**ஆளொருவரின் பெயரைத் தேருநர் இடாப்பில் பதிவதற்கு அல்லது தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு என அந்த ஆளாலேயே செய்யப்படும் உரிமைக்கோரிக்கைக்கான படிவம்**

பதிவு அலுவலருக்கு,

........................................தேர்தல் மாவட்டம்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பிலிருந்து விட்டுவிடப்பட்டதும்*/நீக்கப்பட்டதும்* கீழே கொடுக்கப்பட்டுள்ளதுமான என்னுடைய பெயரை, அந்த இடாப்பில் பதிந்துகொள்வதற்கு என*/தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு என*, நான் இத்தால் இந்த உரிமைக்கோரிக்கையை விடுக்கின்றேன்.

என்னுடைய உரிமைக்கோரிக்கை தொடர்பான விபரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன:—

(1) என்னுடைய முழுப் பெயர்:— திரு.*/திருமதி*/செல்வி:*..................

..........................................................................

(2) 19....ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் நாளன்று நான் சாதாரணமாக வதிந்த [illegible] முகவரி:—

(i) மதிப்பீட்டு இலக்கம் : ........................................

(ii) குடியிருப்பாளர் நிரல் இலக்கம் : ........................................

(iii) தெரு : ........................................

(iv) கிராமம்*/பட்டினம்*/தோட்டம்* : ........................................

(v) அஞ்சலகம் : ........................................

(vi) கிராம சேவை உத்தியோகத்தரின் பிரிவு : ........................................

(vii) உதவி அரசாங்க அதிபரின் பிரிவு : ........................................

(3) 19....ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் நாளன்றுள்ள வயது :

(i) வருடங்கள் :............ மாதங்கள் : ................

(ii) பிறந்த தேதி :........................................

(4) வேறு ஏதேனும் விபரங்கள் : ........................................

........................................

........................................

(5) நான் இத்தால் கூறுவதாவது—

(i) நான் ஓர் இலங்கைப் பிரஜை, என்னால் வைத்திருக்கப்படும்:—

(அ) பிரசா உரிமைச் சான்றிதழின்*/பதிவுச் சான்றிதழின்*/பிரசா உரிமை பற்றிய வேறு ஆவணத்தின்* இலக்கமும் தேதியும் உட்பட,

(ஆ) பிறப்புச் சான்றிதழினதும், பிறப்பு எண்பிப்புக்கான வேறு ஆவணங்களினதும் இலக்கமும், தேதியும் உட்பட, இயைபான விபரங்கள் பின்வருவனவாம் :—

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

(ii) 19....ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் நாளன்று, மேலேயுள்ள (2)-ஆம் விடயத்தில் கூறப்பட்டுள்ள முகவரியில், நான் சாதாரணமாக வதிந்தேன்.

(iii) மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் வேறு எதேனும் முகவரியிலேனும் அல்லது வேறு எதேனும் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்படுவதற்கான உரிமைக்கோரிக்கையொன்றை நான் செய்திருக்கவில்லை.

வெளிப்படுத்துகை

மேலேயுள்ள உரிமைக்கோரிக்கை எல்லா விபரங்களிலும் உண்மையானதென நான் இத்தால் வெளிப்படுத்துவதோடு, மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்குத் தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு நான் தகைமையுடையவன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

..........................................
உரிமைக்கோரிக்கையாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

உரிமைக்கோரிக்கையாளரின் முகவரி :—

..........................................

..........................................

..........................................

தேதி : ..............

* ஏற்புடையனவல்லாத சொற்களை நீக்கிவிடுக.

படிவம் ஆ

பிரிவு 14 (2)

ஆளொருவரின் பெயரைத் தேருநர் இடாப்பில் பதிவதற்கு அல்லது தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு அவரின் சார்பில் வேறு எவரேனும் ஆளால் செய்யப்படும் உரிமைக்கோரிக்கைக்கான படிவம்

பதிவுசெய்யும் அலுவலருக்கு,

..........................................தேர்தல் மாவட்டம்.

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பிலிருந்து விட்டுவிடப் பட்டதும்*/நீக்கப்பட்டதும்* கீழே கொடுக்கப்பட்டுள்ளதுமான ஆளுடைய பெயரை, அந்த இடாப்பில் பதிந்துகொள்வதற்கென*/தொடர்ந்தும் வைத்திருப்பதற்கென*, நான் இத்தால் இந்த உரிமைக்கோரிக்கையை விடுக்கின்றேன்.

இந்த உரிமைக்கோரிக்கை தொடர்பிலான விபரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன :—

(1) ஆளின் முழுப்பெயர் : திரு*/திருமதி*/செல்வி* ..........................................

..........................................

(2) 19....ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் நாளன்று மேற்கூறப்பட்டுள்ள ஆள் வதிந்த தகைமையளிக்கும் முகவரி,

(i) மதிப்பீட்டு இலக்கம் : ..........................................

(ii) குடியிருப்பாளர் நிரல் இலக்கம் : ..........................................

(iii) தெரு : ..........................................

(iv) கிராமம்*/பட்டினம்*/தோட்டம்* : ..........................................

(v) அஞ்சலகம் : ..........................................

(vi) கிராம சேவை உத்தியோகத்தரின் பிரிவு : ..........................................

(vii) உதவி அரசாங்க அதிபரின் பிரிவு : ..........................................

(3) 19....ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் நாளன்றுள்ள வயது :

(i) வருடங்கள் :................ மாதங்கள் :................

(ii) பிறந்த திகதி : ..............................................

(4) வேறு ஏதேனும் விபரங்கள் : ..............................

..............................

..............................

(5) நான் இத்தால் வெளிப்படுத்துவதாவது—

(i) எந்த ஆள் சார்பில் இவ்வுரிமைக்கோரிக்கை செய்யப்படுகின்றதோ, அந்த ஆள் இலங்கையின் ஒரு பிரசையாவார். என்னால் வைத்திருக்கப்படும் :—

(அ) பிரசா உரிமைச் சான்றிதழின்*/பதிவுச் சான்றிதழின்*/பிரசா உரிமை பற்றிய வேறு ஆவணத்தின்* இலக்கமும் திகதியும் உட்பட,

(ஆ) பிறப்புச் சான்றிதழினதும் பிறப்பு எண்பிப்புக்கான வேறு ஆவணங்களினதும் இலக்கமும், திகதியும் உட்பட,

இயைபான விபரங்கள் பின்வருவனவாம் :—

..............................................................

..............................................................

..............................................................

(ii) எந்த ஆள் சார்பில் இந்த உரிமைக்கோரிக்கை செய்யப்படுகின்றதோ, அந்த ஆள், 19.... ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் நாளன்று மேலேயுள்ள (2) ஆம் விடயத்தில் கூறப்பட்டுள்ள முகவரியில் சாதாரணமாக வதிந்தார்.

(iii) எந்த ஆள் சார்பில் இந்த உரிமைக்கோரிக்கை செய்யப்படுகின்றதோ; அந்த ஆள், மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் வேறு ஏதேனும் முகவரியின்கீழ் அல்லது வேறு ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில், பதிவு செய்யப்படுவதற்கான, உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்திருக்கவில்லை.

## வெளிப்படுத்துகை

மேலேயுள்ள உரிமைக்கோரிக்கை, எல்லா வகையிலும் உண்மையானது எனவும், எந்த ஆள் சார்பில் உரிமைக்கோரிக்கை செய்யப்படுகின்றதோ அந்த ஆள் மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையுடையவராவார் எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

....................................

விண்ணப்பகாரரின் கையொப்பம் அல்லது
பெருவிரல் அடையாளம்.

விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்.

..............................................................

..............................................................

..............................................................

திகதி : ....................

* ஏற்புடையனவல்லாத சொற்களை நீக்கிவிடுக.

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம்

## படிவம் இ

பிரிவு 14 (6)

### தேருநர் இடாப்பில் பெயரொன்று பதியப்படுவதை அல்லது தொடர்ந்தும் வைத்திருக்கப்படுவதை ஆட்சேபனை செய்வதற்கான படிவம்

பதிவு அலுவலருக்கு,

..................................தேர்தல் மாவட்டம்

..........................................................................ஆகிய நான்

மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில், கீழே விவரணம் செய்யப்படும் ஆளின் பெயரைப் பதிந்துகொள்வதை*/தொடர்ந்தும் வைத்திருப்பதை* இத்தால் ஆட்சேபிக்கிறேன்—

*விடயத்துக்கேற்றவாறு, இடாப்பில் அல்லது "ஆ" என்னும் நிரலில் காணப்படுகின்றவாறு விபரங்களை இங்கே தரவும்.*

ஆட்சேபனை செய்யப்பட்ட ஆளின் பெயர் : ....................................

....................................

அவருடைய தகைமையளிக்கும் முகவரி : ....................................

....................................

....................................

வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து : ....................................

வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் : ....................................

பதிவு இலக்கம் : ....................................

ஆட்சேபனைக்கான ஏதுக்கள் : ....................................

....................................

....................................

....................................

மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில்*/"ஆ" என்னும் நிரலில்* பின்வருமாறு என்னுடைய பெயர் காணப்படுகிறது :—

*விடயத்துக்கேற்றவாறு, இடாப்பில் அல்லது "ஆ" என்னும் நிரலில் காணப்படுகின்றவாறு விபரங்களை இங்கே தரவும்.*

பெயர் : ....................................

தகைமையளிக்கும் முகவரி : ....................................

....................................

....................................

வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து : ....................................

வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் : ....................................

பதிவு இலக்கம் : ....................................

....................................

ஆட்சேபனையாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

தேதி :....................................

அறிவித்தல் அனுப்பப்படுவதற்கான ஆட்சேபனையாளரின் முகவரி

....................................................

....................................................

....................................................

*ஏற்புடையனவல்லாத சொற்களை நீக்கிவிடுக.

### படிவம் ஈ

### பிரிவு 14 (7)

### தேருநர் இடாப்பில் உரிமைக்கோரிக்கையாளர் ஒருவரின் பெயரைப் பதிவதனை ஆட்சேபனை செய்வதற்கான படிவம்

பதிவு அலுவலருக்கு,

.......................................... தேர்தல் மாவட்டம்.

.......................................................................... ஆகிய நான், மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில், கீழே விவரணம் செய்யப்படும் ஆளின் பெயர் பதியப்படுவதை இத்தால் ஆட்சேபிக்கிறேன்—

ஆட்சேபனை செய்யப்பட்ட ஆளின் பெயர் : ..........................................

அவருடைய தகைமையளிக்கும் முகவரி : ..........................................

ஆட்சேபனைக்கான ஏதுக்கள் : ..........................................

மேற்கூறப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில்*/ஆ என்னும் நிரலில்* பின்வருமாறு என்னுடைய பெயர் காணப்படுகின்றது :—

பெயர் : ..........................................

தகைமையளிக்கும் முகவரி : ..........................................

வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து : ..........................................

வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் : ..........................................

பதிவு இலக்கம் : ..........................................

..........................................
ஆட்சேபனையாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

திகதி : ..........................................

அறிவித்தல் அனுப்பப்படுவதற்கான ஆட்சேபனையாளரின் முகவரி : ..........................................

* ஏற்புடையனவல்லாத சொற்களை நீக்கிவிடுக.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை., கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்